தீக்கதிர்

# நீதிமன்ற தடையை மீறி என்.எல்.சி தொழிலாளர்கள் 4வது நாளாக வேலைநிறுத்தம்



---

நெய்வேலி, செப். 7-பணி நிரந்தரம் செய்யக்கோரி, நீதிமன்ற தடையையும் மீறி என்.எல்.சி ஒப்பந்த தொழிலாளர்கள் 4-வது நாளாக வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். இந்தப் போராட்டத்திற்கு அக்டோபர் 7-ம் தேதிவரை சென்னை உயர்நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்திருக்கிறது. இதனையும் மீறி, வேலைநிறுத்தம் மேற்கொள்ளப்பட் டுள்ளது.கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிடில், போராட்டம் தீவிரமடையும் என ஒப்பந்த தொழிலாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். வேலைநிறுத்தம் தொடர்ந்தால், மின் உற்பத்தி பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

பிரச்சனைக்கு தீர்வு காண, சென்னையில் மண்டல தொழிலாளர் ஆணையர் தலைமையில் திங்களன்று முத்தரப்பு பேச்சுவார்த்தை நடைபெறுகிறது. பணி மூப்பு அடிப்படையில், ஒப்பந்த தொழிலாளர்களை நிரந்தரம் செய்ய வேண்டும் என உச்ச நீதிமன்றம் கடந்தாண்டு உத்தரவிட்டது. இதனை நிறைவேற்ற என்.எல்.சி நிர்வாகம் பிடிவாதமாக மறுத்து வரும்நிலையில், தொழிலாளர் கள் வேலைநிறுத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.